தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

எஸ். பட்டாபிராமன், எம். ஏ., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஸூ சித்திரைமீ 21௳ (3-5-'22.) | பு. 2.

ச ஞ் சீ வா ஞ் ச ன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை, மார், முதுகு, இடுப்பு	வலி	தேள், பாம்புக், பூச்சிக், விஷக்	கடி	பல், கால், காது, கை	நோவு

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணா எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

சுதேசியமானது! உபயோகமானது!!

அ மி ர் தா ஞ் ச ன ம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

தபால் கூலியுள்பட சந்தா

ஒரு வருஷத்திற்கு ரூ. **5—0—0**

அரை வருஷத்திற்கு ரூ. **3—0—0**

விஷய அடக்கம்.

குறிப்புகள்	...	...	10
நமது எண்ணம்	...	...	11
'நேஷன்' I	...	...	11
தேக உழைப்பும் அதன் பெருமையும்		...	13
மீராபாய்	...	...	13

தமிழ் உலகு

துந்துபிௗ சித்திரைமீ 21ௗ

குறிப்புகள்

நமது தேசத்தில் பெரிய உத்தியோகங்கள் வகித்து ஏராளமான திரவியம் ஸம்பாதித்து, அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்ட பட்டங்களுடனும் வெகுமானங்களுடனும் உபகார சம்பளங்களுடனும் இங்கிலாந்துக்கு திரும்பச்செல்லும் ஆங்கிலேயர்கள் அநேகமாக எல்லோரும் அரசாங்க சீர்திருத்தங்களில் முயன்றுவரும் இந்தியர்களை இகழ்வதுமன்றி, அம்முயற்சி ராஜத்துரோக மென்று பறையறைந்து இந்தியாவின் முன்னேற்றத்திற்கு பலவிதமான இடையூறுகளையும் செய்கிறார்கள். இப்படிச் செய்வதின் அந்தரங்க காரணமென்னவென்றால், இதுகாறும் தங்கள் முன்னோர்கள் இந்தியாவைத் தங்களுடைய பண்ணை நிலம்போல் ஆண்டு வந்தது இனி கூடாமல் போய்விடும் என்ற பயமே.

இந்த பயமானது இங்கிலாந்தில் பிரசுரமாகும் 'ஏஷியாடிக் ரிவியூ' என்னும் பத்திரிகையில் ஸமீபத்தில் ஆங்கிலத் துரைத்தனத்தில் ஸம்பந்தப்பட்டிருந்த லேம்ஸ்டன் பிரபுவும், ஸர் ஹென்ரீ கிரேய்க் என்பவரும் எழுதியிருக்கிற வியாஸங்களில் நன்கு விளங்குகிறது. சுய ஆட்சிக்கு அர்ஹதை இந்தியர்களுக்கு ஏற்படவில்லை என்றும், அது என்றைக்கும் ஏற்படுவது ஸந்தேகம் என்றும், ஒருகால் ஏற்படுவதானாலும் வெகு காலம் செல்லும் என்றும் இவர்களுடைய கொள்கை. 1919ம் வருஷம் அனுஷ்டானத்திற்கு வந்த சீர்திருத்தச் சட்டத்தால் இந்தியர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சுதந்திரங்களையே அவர்களுக்கு நிர்வகிக்க தெரியவில்லை; ராஜ்யபாரம் நாளுக்குநாள் சிரமமாகி வருகிறது; தேசத்தில் கலகங்களும், கட்டுக்கு மீறி நடப்பதும், ஐரோப்பியர்களிடத்தில் வெறுப்பும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. ஆகையால் விபரீதமான சம்பவங்கள் ஒன்றும் நேரிடாமல் இருக்கும்பொருட்டு சட்டங்களுக்கும், அரசாங்கக் கட்டுப்பாடுகளுக்கும், ஜனங்கள் மீறி நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டியதே துரைத்தனத்தின் முதல்கடமை என்று இவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இதுவுமன்றி இந்தியர்கள் சுய ஆட்சி வேண்டுமென்று பரபரப்புடன் ஒரே மூச்சாகக் கத்துவதற்கு பயந்து கானடாவுக்குள்ளது போன்ற சுய ஆட்சியைக் கொடுப்பது ஜ்வரநோயில் வருந்துபவனுக்கு மோர்கொடுப்பதுபோலாகுமென்பது இவர்களது தீர்மானம்.

இவ்வித அபிப்பிராயங்கள் முற்றிலும் தவறு என்பது இந்தியாவில் தற்காலம் ஏற்பட்டிருக்கும் இயக்கத்தின் தத்துவத்தை அறிந்தவர்களுக்கு நன்றாய்த்தெரியும். ஆயினும் இங்கிலாந்திலிருப்பவர்களுக்கு இந்தியாவையும் அதன் ஜனங்களையும் பற்றி யாதொன்றும் தெரியாதாகையால், இவர்கள் சொல்வதே வேத வாக்கென்று நம்பி, இந்தியர்கள் நாகரீகமற்ற காட்டு மிருகாண்டிகள் என்றும், சேனையின் பலத்தால் அடக்கி ஆளாத வரையில் இந்தியாவில் இரத்தம் ஆறாக பெருகி ஓடும் என்றும் அவர்கள் முழுமையும் நம்பி யிருக்கிறார்கள். இந்த தப்பபிப்பிராயத்தை மாற்றுவதற்கு இங்கிலாந்திலும், இதர முக்கியமான மேல் நாட்டு தேசங்களிலும் தேசியத் தொண்டர்களை அனுப்பி பிரசாரம்செய்தல் முற்றிலும் அவசியம்.

இப்போது இட்டாலி தேசத்திலுள்ள ஜினோவா நகரில் கூடியிருக்கும் பற்பல தேசப்பிரதிநிதிகளுடைய மகா நாடு பயன் படுவதற்கு யாதொரு ஆதாரத்தையுங் காணோம். இந்த மகா நாட்டை கூட்டின முக்கிய கருத்தென்னவென்பதை இன்று சற்று விசாரிப்போம். 1918ௗ யுத்தம் நின்றது முதல் ஐரோப்பிய தேசங்களில் பஞ்சமும் ஜீவிக்கக் குறைவும் மேலிட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் வார்ஸேல்ஸ் நகரத்தில் ஏற்பட்ட ஐரோப்பிய சமாதானமே. இதனால் ஜெர்மனி, தான் சண்டையை ஆரம்பித்த குற்றத்திற்காக அதற்கு எதிரிகளாய் நின்று ஐக்யத்தோடு போர் புரிந்த இங்கிலாந்து, பிரான்ஸு, இட்டாலி, பெல்ஜியம், முதலான தேசங்களுக்கு ஏராளமான திரவியம் நஷ்ட ஈடாக கொடுக்கவேண்டுமென்றும், அது முழுமையும் வசூலாகும் வரை ஜெர்மனியின் ஒரு பாகத்தில், ஐக்கிய தேசங்களுடைய ஸைன்யங்களை வைத்து வரிகள் மூலமாக வசூல் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் துகை வெகு ஜாஸ்தியாக இருப்பதால், ஜெர்மனி எவ்வளவு சிரமப்பட்டும் கொடுப்பதற்கு கஷ்டப்படுகிறது. ஆனால் சண்டையால் முக்கியமாக பிரான்ஸின் செழிப்பான பாகங்கள் பெரும்பான்மையும் திடலாக அடிக்கப்பட்டு விட்டதால், ஜெர்மனியினிடமிருந்து நஷ்டத்துகையை வசூல் செய்து தான் இந்த இடங்களை சீர்திருத்தவேண்டுமென்று பிரஞ்சுக்காரர்கள் பிடிவாதமாக இருக்கிறார்கள்.

உடன்படிக்கையின் அம்சங்களை நிறைவேற்றும் பொருட்டு இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் நேசம் அவசியமாக இருப்பதால், நஷ்டத் துகை வசூல் செய்யும் விஷயத்தில் பிரான்ஸின் இஷ்டப்படியே இங்கிலாந்து நடக்கவேண்டியிருக்கிறது. ஆயினும் யுத்தத்திற்கு முன் இங்கிலீஷ் கைத்தொழில் ஸாமான்கள் வெகுவாக ஜெர்மனியினால் வாங்கப்பட்டு வந்தன. இப்போது ஜெர்மனிக்கு வந்திருக்கும் வறுமையினாலும், நஷ்டத்துகை கொடுக்கணக்காக வேண்டிய கட்டாயத்தினாலும், இங்கிலீஷ் ஸாமான்களை வாங்க மிகுதியான பணம் அத்தேசத்தில் இல்லாமல் போகவே, முற்காலத்தில் அனுப்பப்பட்டு வந்த இங்கிலீஷ் ஸாமான்கள் இப்போது விலைப் போவது அஸாத்தியமாயிருக்கிறது. ஆகையால்

இங்கிலாந்தில் வியாபாரக்குறைவும் அதிலிருந்து ஏழை ஜனங்களுக்கு வேலையில்லாமல் போனதினால் வறுமையும் ஜாஸ்தியாயிருக்கிறது.

இக்காரணங்களைக்கொண்டு இங்கிலீஷ் முக்கிய மந்திரி மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் ஜெர்மனியிடம் வசூல் செய்யும் நஷ்டத்துகையை குறைக்கவேண்டுமென்று ஆனமட்டும் முயற்சிசெய்தும் அதற்கு பிரான்ஸ் உடன்படாததால், ஐரோப்பாவில் வர்த்தகம் சண்டைக்கு முன்னிருந்ததுபோல் விருத்தி அடையும் பொருட்டு வேறுமார்க்கங்கள் தேடினார். இப்பொழுது ஐரோப்பாவில் வியாபாரத்திற்கு முக்கிய இடையூறாக இருப்பது ருஷியாவின் நிலைமை. சண்டைக்கு முன் ஐரோப்பாவுக்கு வேண்டிய கோதுமை முழுதும் ருஷியாவிலேயே விளைந்து வந்தது. இதை வேண்டிய தேசங்களுக்கு ஏற்றுமதிசெய்து, அவைகளிடத்திலிருந்து தனக்கு வேண்டிய ஸாமான்களை ருஷியா வரவழித்து வந்தபடியால் வியாபாரம் புரண்டு கொண்டு வந்தது. சண்டை நடுவிலேயே ருஷியர்கள் தங்கள் சக்கிரவர்த்தியை நீக்கி குடியரசு ஸ்தாபித்து, நிலங்களெல்லாம் ஸர்க்காரை சேர்ந்ததென்றும், எவனுக்கும் சொந்த சொத்து என்பது கிடையாதென்றும், தேசத்திலுள்ள எல்லோரும் ஒரு குடும்பம் போல் உழைத்து அடையும் பலனை ஸமமாகவே அனுபவிக்கவேண்டுமென்றும் புதிய கொள்கைகளை அனுஷ்டானத்திற்கு கொண்டுவந்தார்கள். இதனால் மஹத்தான கலகங்களும் தேசத்திற்குள் சண்டைகளும், பஞ்சமும் வறுமையும் மேலிட்டு இந்தக்ஷணத்தில் இரண்டு கோடி ஜனங்கள் சாப்பாட்டுக்கில்லாமல் மடிந்து வருகிறார்கள். இக்காரணங்களால் ருஷியாவிற்கும் இதர தேசங்களுக்கும் வியாபாரம் அற்றுப்போயிற்று. இதை திருத்த உத்தேசித்து, ருஷியாவிற்கும் இதர தேசங்களுக்கும் போக்கு வரவு ஏற்படும் பொருட்டும், ருஷியாவில் ஏற்பட்டிருக்கும் குடியரசை இதர தேசங்கள் ஒப்பும்பொருட்டும், ஜினோவா கான்பரன்ஸ் லாயிட் ஜார்ஜின் முயற்சியால் கூட்டப்பட்டது.

அது எவ்வெண்ணத்துடன் கூட்டப்பட்டதோ அவ்வெண்ணம் நிறைவேறக் காரணமில்லை என்றுதோன்றுகிறது. மேலுமிதைப்பற்றி அடுத்த வாரம் எழுதுவோம்.

நமது எண்ணம்.

தமிழில் மிகவும் நேர்மையாய் இயற்றப்பட்டுவரும் பல பத்திரிகைகள் நிறைந்திருக்கும் இக்காலத்தில், "மறுபடியும் ஒன்று புதிதாகத் தோன்றுவதற்கென்ன காரணம்," எனக்கேழ்க்கப்படுவதில் நமக்கெவ்வித ஆச்சரியமும் இல்லை. சுதேசமித்திரன், தேசபக்தன், நவசக்தி, இவைகளைப்போலொத்த பத்திரிகைகள் எப்பொழுதும், எந்த தேசத்திலும், களிப்புடன் கொண்டாடப்பட்டுவரும். தமிழ் நாட்டில், இவைகள் எல்லையற்றதோர் படிப்பையும், ஊக்கத்தையும், எங்கும் புகட்டியிருக்கின்றன. இவைகளின் புகழ் என்றும் அழியாதது. இவைகள் செய்திருக்கும் நன்மைக்காக நாம் மனதுடன் நன்றிபாராட்டுகிறோம். தென்னிந்தியாவில், மதிப்பதற்கு முடியாததான பெருங் காரியத்தை, தன்னுடைய தைர்யத்தாலும், தீர்மானத்தாலும், சுதேசமித்திரனென்னும் பத்திரிகையை நடத்தி சாதித்துவைத்த ஜி. சுப்பிரமண்ய அய்யரின் ஞாபகத்தைத் தங்கப்பதுமைகளால் நாம் நாடெங்கும் பரவச்செய்யக்கடமைப்பட்டிருக்கிறோம். மேலும், தற்காலத்தில், தமிழர்களின் நலத்தைக்கருதி, விடாமுயற்சியுடன், எழுதப்பட்டுவரும் நவசக்தி போன்ற பேபர்கள் இத்தமிழ் உலகத்திற்கே ஆபரணங்கள் போல விளங்குகின்றன. இவைகளின் நடுவில், நாம் இப்பொழுது திடீரெனக்கிளம்புவதற்குக்காரணம் யாது? போட்டிக்காகவா? இல்லை. அல்லாமல், நமக்கு வாய்த்திருக்கும் படிப்புப்பெருக்கால் இத்தமிழ் உலகம் முழுவதையும் ஊட்டி வளரச்செய்யும் எண்ணத்துடனான் நாம் இக்காரியத்தையாரம்பிக்கவில்லை. தமிழில் நாம் புலவர்களல்லவென்பதை நன்றாயறிந்ததுடன், நாம் செய்யக்கூடுவதும் அற்பம் என்பதை உணர்கின்றோம். ஆகிலும் தமிழ் பாஷையில் இன்னமும் செய்வதற்கான விஷயங்கள் அநேகமிருக்கின்றன. தேசமெங்கும் ஓர் பெரிதான கிளர்ச்சியுண்டாயிருக்கும் இத்தருணத்தில், மேல்நாட்டாரின் சம்பந்தமாக நாம் அளவற்றஞ் ஞானத்தைத் தமிழில் பரவச்செய்வது நன்றே. நம்மால் இயன்றமட்டும், வஞ்சனையன்றியில், தெளிவான நடையிலெழுதக் கூடுமென்று நாம் நம்பியிருக்கின்றோம். செந்தமிழ் என்பதற்காக நாம் இதைப்படிப்பவர்களின் ஆதரவையெதிர் பார்க்கக்கூடவில்லை. நாம் சொல்வது மாத்திரம் எளிதில் விளங்குமாகில், நாம் எண்ணிய கருமம் சித்திபெற்றதென சந்தோஷமடைவோம். தமிழில் நாம் அடைந்த கல்விச்செல்வத்தைக்காட்டுவதற்கென்று எண்ணி, நாம் இப்பத்திரிகையை நடத்திவரத்துணியாததினால், நம்மிடம் மனமிரங்கி, மாசறக்கற்ற பெரியோர்கள் நமது பிழைகளை பொறுத்து அருள்புரிவார்களாக.

"நேஷன்"

I

ஆங்கிலபாஷையில், ஜாதி, மதம், முதலியவைகளின் பேதங்களைக் குறிப்பிடுவதற்குள்ள வார்த்தைகளைப்போல், நாம் இதுவரையில் நன்கறியாததோர் விஷயத்தை அர்த்தமாகக் கொண்ட "நேஷன்" என்னும் வார்த்தையை நீங்கள் கேட்டிருக்கலாம். நாம் சற்று அதை பற்றிப் பேச விரும்புகின்றோம். மேல்நாட்டு நாகரீகம் எதையும் ஆக்கிரமித்து, ஜயித்துவரும் இந்நாளில், நாம் அதின் மூலபலத்தைப் பற்றி ஆராய்ந்தறிந்து கொள்வது யுக்தமே. மேல்நாட்டார் தங்களுடைய வன்மையைச் சிறிதேனும் குன்றாமல் எப்படிக் காப்பாற்றி வருகின்றார்கள்? அவர்களுக்கு பலமென்ற உணவு எப்பாத்திரத்திலிருந்து இவ்விதம் விருத்தியடைகின்றது? இப்பூமண்டலம் முழுமையும், ஓர் பசுவைபோலக் கொட்டிலில்

கட்டிக் கறந்து, சுகமாகக் காலம் கழித்து வருபவர்களுக்குப் பக்கத்துணையாக இருந்துவரும் தெய்வமொன்று உண்டோ? இவைகளையும், இன்னும் மற்ற விஷயங்களையும் நாம் பரிசோதிக்குங்கால் சில ரகசியங்கள் தென்படுகின்றன. ஒரே கவலையுடனும், உற்சாகத்துடனும், தைரியத்துடனும், ஐந்தல்லது ஆறு கோடி ஜனங்கள் என்றைக்கும் தங்கள் காரியங்களை நடத்திவருவார்களே யாகில், அவர்களுக்குக்கிட்டாத பலன்கள் என்ன இருக்கின்றன? அயர்லண்ட் சம்பந்தமாக இங்கிலாண்டில் லிபரல், கன்ஸர்வேடிவ் இருபக்கத்தாருக்குள் மனஸ்தாபம் மிக்கப் பிரமாதமாகியும், ஜெர்மானியர்கள் சண்டைக்கு மும்முரமாய் கிளம்பினவுடன், ஆங்கிலேயர்கள் எப்படி நடந்து கொண்டார்கள்? ஒருவருக்கொருவர் சச்சரவென்னும் பூதத்தை உடனே ஆழமாகப் புதைத்துவிட்டு தேசவிசுவாசத்தால், எல்லோரும் சிநேகக்கட்டிலகப்பட்டவர்களாய், தீரத்துடன், யுத்தத்திற்கு தயாராக நின்றார்கள். மேலும், லக்ஷக்கணக்கான ஜெர்மன் படையை எதிர்த்து நிற்க சைன்யங்கள் தேவையென்று லார்ட் கிச்சனர் சொன்னதும், தாங்கள் பிறந்து வளர்ந்து வந்த தேசததை ரக்ஷிப்பதற்காக, எவ்வளவாயிரம் சிறுவர்கள், மலர்ந்த முகத்துடன், வீடு, இன்பம், இவைகளைத்துறந்து முன்வந்தார்கள்? வெளியூர்களிலிருந்தே பிரிடிஷ் ஜனங்களுக்குக் கிடைத்துவரும் ஆகாரத்தை முற்றிலும் தடுத்துப்பட்டினியென்னும் அஸ்திரத்தால், ஜெர்மன்போர்வீரர்கள் சத்துருக்களை ஜயிப்பதற்கெண்ணி, எல்லாக் கப்பல்களையும் மூழ்கடித்து வந்த பொழுது அச்சமென்பதில்லாமல், இங்கிலண்டைக்காத்த பிரிடிஷ் மாலுமிகளின் சௌரியத்தைப் பார்த்துத் திகைக்காதவர்கள் யார்? இவ்வளவு தூரம் ஆங்கிலேயர்களைப் பரமாவேசத்தால் கிளப்பி, சுயநலம் பாராமல், சற்றேனும் சலிக்காத வன்மையுடன், தீவிரமாக நடக்கச்செய்தது, அவர்களின் ஒரே தைரியமும், உத்ஸாகமும், கவலையுமே. தங்கள் தேசம், தங்கள் நாகரீகம், தங்கள் ஊரில் தாங்களே ராஜ்யபாரம் செய்து வரும் பெருமை, தங்கள் சுதந்திரங்கள், இவைகளையிழைப்பதைக்காட்டிலும் உயிரை யிழப்பதே மேலென அவ்வளவு மன உறுதி ஆங்கிலேயர்களுக்கு எப்போதும் உடன்பிறந்தது. தங்களுக்குள் எவ்வளவு மனஸ்தாபங்களிருந்த போதிலும், தாங்கள் மேன்மையாக மதித்துவரும் ஒப்பற்ற சில பொருள்களுக்குத் தீங்கு நேரிடின், தங்கள் உரிமைகளை முக்கியமெனக் கருதி, ஒற்றுமையுடன், கிளம்புகின்றார்கள். இங்கே நாம் ஓர் வார்த்தையை உபயோகிக்க எண்ணுகின்றோம். மேல் நாட்டாரின் சரித்திரத்தை நாம் படிக்குங்கால், இவ்வார்த்தை யடிக்கடி நமது கண்முன் நிற்கின்றது. இங்கிலீஷ் நேஷன்—ப்ரெஞ்ச் நேஷன்—ஜெர்மன் நேஷன்—அமெரிக்கன் நேஷன் இப்பதங்கள் பிரதானமாகப் பெரிய புஸ்தகங்களில் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. "நேஷன்" என்னும் வார்த்தையில் அடங்கியுள்ள அர்த்தம் எவ்வளவு? இதை நாம் தமிழில் எத்தமிழ் வார்த்தையைக்கொண்டும் தெளிவாக தெரிவிக்கக் கூடுமென்பதை நாம் நம்பவில்லை. "நேஷன்" என்னும் இப்பதத்தால் குறிப்பிடப்பட்ட விஷயங்களென்ன?

1. நாம் பிறந்து வளர்ந்து வந்த தேசம்.

2. பிறந்தது முதல் பழக்கத்தால் நம்முடனுடன் ஐக்கியமாகியிருக்கும் நம்முடைய ஆசாரங்கள், நம்முடைய வழக்க வொழுக்கங்கள்.

3. நம்முடைய க்ஷேமத்திற்காக, நம் பெரியோர்கள் பாடுபட்டுத் தேடித்திரட்டிவைத்த, நமது சட்டதிட்டங்கள்.

4. நம்முடையதென்று தனியாக நிற்கும், நம் மனோபீஷ்டங்கள்.

5. இன்னமும், குபேரனது தனத்தைப் பார்க்கிலும் பதின்மடங்குயர்ந்ததான, பல விஷயங்களும் இதற்குள் பூர்ணமாயிருக்கின்றன. வேறு ஒரு பாஷையிலிருந்து, ஓர் வார்த்தையைக் கடன் வாங்குவது பிசகென எண்ணலாம். ஆனால் எவ்விதத்திலும் நமக்கு இது இழிவாகத் தோன்றவில்லை. தமிழ்பாஷை செழித்தோங்க வேண்டுமென்றால், வேறு ஊர்களிலிருந்து நாம் சில வார்த்தைகளை யெடுத்துக்கொள்வதில் மோசமில்லை. இவ்விஷயத்தைப்பற்றித் தனியாக நாம் மற்றொருதரம் பேசுவோம். ஏனெனில் இது மிக்கப் பெரியதோர் விஷயம்; அல்லாமல், நாம் இங்கே "நேஷன்" என்னும் பதத்தைப்பற்றி விவரிக்க விரும்புகின்றோம்.

இவ்விந்தியாவில் இருந்து வரும் நாம் ஓர் நேஷன் என்பதை முழுவதும் உணரவேண்டும். இந்தியா என்பதே நம்முடைய தெய்வம். அத்தெய்வத்தை நமதுள்ளத்தில் வைத்து, எக்காலமும், நாம் பூஜித்து வருவதவசியமாகும். தேவி உபாஸனை செய்தால் சகல பாக்கியங்களும் பிரவாகமாக ஓடுமென்று நாம் கேட்டிருக்கிறோம். நம்மிந்தியாவைப் பார்க்கிலும் சிரேஷ்டமான தெய்வங்கள் இருக்கின்றனவென நாம் நினைக்கவில்லை. தாயின் பாதங்களில் விழுந்து நமஸ்கரிக்க நாம் புண்யம் செய்தவர்களா யிருத்தல் முக்கியமல்லவா? தாயின் சந்தோஷமும், துக்கமும் மக்களுடையதென்று சொல்ல எந்த தெய்வம் நம்மைத் தேடிவரவேண்டும்? தாயைத்தள்ளித் தாயின் நினைவை மனதிலிருந்து ஒழித்து, நம்முடைய வாழ்வே பெரிதென நாம் இருந்தால், நாம் வாழ்ந்து வருவது எப்படி? "முன்னறி" தெய்வங்களில் முதன்மையாக நிற்கும் அன்னையை நாம் அறியாதிருக்கின், எளிதில் திருப்தியடைந்து வரன் கொடுக்கும் தெய்வங்களும் நம்மிடம் கிருபை செய்யமாட்டா. அன்னமும், ஆனந்தமும், பின்பு எங்கிருந்து வரும்? துக்கத்தால் மெலிந்துருகும் தாய் கண்ணீர் சொரிந்த வண்ணம் கிடக்கும் பொழுது, அறுசுவைப்பண்டங்கள் எப்படி நம் வாயிற்குள் குதிக்கும்? பெற்றெடுத்த அன்னையிடம்போல, நம் தேசத்தின்கண் நாம் பக்தி பண்ணிக்கொண்டிராமல், மூர்க்கர்களாய், நாம் உயர்வற்ற லக்ஷ்யத்துடன் திரிவது நமக்கழகாகுமா? ஒற்றுமையற்ற எக்குடும்பத்தில், கற்கண்டும், சீனியும், தேனும், கரைபுரண்டு வெள்ளமாகப் பெருகக்கூடும்? தாயின்மீது வைக்கப்பட்ட பக்ஷமிகுதியால் ஒருவருக்கொருவர் கட்டுண்டு, அன்பு பாராட்டாவிட்டால், பிறகு எப்படி ஒற்றுமையாகக் காலம் கழித்தல் சாத்தியம்? எக்காரியத்திலும், "இந்தியா" என்ற எண்ணம் நம்மிடம் குடிகொண்டிருக்குமாயின், நமக்குள்ளிருக்கின்ற வித்தியாசங்களெல்லாம் பறந்துபோம். எவ்வளவு மதங்கள் நம்நாட்டில் இருந்தபோதிலும், சண்டை யென்பதில்லாமல், அந்யோன்யம் ஸர்வகாலமும் நம்தேசத்தில் நிலைபெற்றிருக்குமென்பதில் சந்தேகமில்லை. நாடு சீர்குலைந்துவிட்டால் நம்முடைய பதவியும், தெருவில் இலைக்காகக் குரைக்கின்ற நாயின் கதியைக்காட்டிலும் மேன்மையாக ஆகமாட்டாது. ஒற்றுமையென்பது முக்கியம். அதில்லாவிடில் எவ்வித ஐசுவரியமும் நம்மையணுகுமா? இது காறும் லக்ஷ்மியென சொல்லப்பட்டவள் நம்தேசத்தில் வாசம் செய்து வருகின்றாள் என்பதைக் காண்பிக்க ஒரு சாக்ஷி

ணையும் நாம் காணவில்லை. இனிமேலாவது, நாம் இன்று வரையில் அனுபவித்து வந்ததெல்லாவற்றையும் மறக்காமல், பட்டபிற்பாடும் கண்ணை விழித்துப்பார்த்து, ஒற்றுமையில்லாததால் எவ்வளவு ஈனமான ஸ்திதிக்கு வந்து விட்டோமென்பதை உணர்ந்து, ஐக்கியம், அந்யோன்யம், என்ற தர்மத்தைக் கைப்பிடிக்கக்கடமைப்பட்டிருக்கிறோம்.

தேக உழைப்பும் அதன் பெருமையும்.

நம் நாட்டில் தற்காலம் இருக்கும் ஏழ்மை எக்காலத்திலும் இருந்ததில்லை. இந்நிலைமையின் காரணத்தைக் குறித்து நன்கு ஆராய்வோமாகில் எளிதில் விளங்கும். நமக்கு தெரிந்த சில ஆண்டுகளுக்கு முன் நமது முன்னோர்கள் தங்களுடைய விஷயங்களை நடத்தி வந்த விதத்திற்கும் நாம் இப்போது நம் விஷயங்களை கவனித்து வரும் விதத்திற்கும் வேற்றுமை தெளிவாக புலப்படும். நம் முன்னோர்களுடைய தேவைகள் சிலவே. அந்த சிலதேவைகளை தங்களுடைய சரீர உழைப்பினாலேயே அடைந்து வந்தனர். இப்போது நமக்கு நாகரீகம் என்ற மாயபெயர் பூண்டு தேவைகள் எண்ணற்றவை. அவைகளில் ஒன்றையாவது நம் முயற்சியால் அடைய சக்தியற்றவர்களாயிருக்கின்றோம். நம்மனதிற்கு சரீர உழைப்பு கௌரவக் குறைவாக தோன்றுகிறது. இவ்வித தவறான எண்ணமே நம் ஏழ்மைக்கு காரணம் என்பதில் ஐயமில்லை. அன்னியர்களிடமிருந்து நமக்கு வேண்டுவன கிடைக்கவேண்டுமென்று எதிர்பார்க்கும்வரை நாம் வெகு கீழான நிலையில்தான் வருந்தவேண்டும். சுயராஜ்யத்திற்கென்று பாடுபடுபவர்கள் முதல் முதலாக நம்அடிமைத்தனத்திற்கு ஹேதுவாய் இருக்கும் இவ்வெண்ணத்தை நம் ஜனங்களிடமிருந்து அகற்ற முன்வரவேண்டும். மேல் நாட்டுப்படிப்பில் பயின்றுவரும் நம்நாட்டு வாலிபர்கள் தேக உழைப்பை இகழ்ந்து கூறுகிறார்கள். நம் நாட்டினரில் இன்றைக்கு ஏராளமான ஜனங்கள் எவ்விதவேலையுமற்று சோம்பேறிகளாக காலங்கழித்து வருகிறார்கள். இவர்களை வினவினால் தங்களுக்கு வேலை ஒன்றும் கிடைக்கவில்லையென்றும் அரசாங்கத்தார் தங்களுடைய பிழைப்புக்கு வழி தேடிக்கொடுக்க வேண்டுமென்றும் குறைகூறுகிறார்கள். அரசாங்கமே தேசத்தின் பொது ஜனங்களாலேயே காப்பாற்றப் படுகின்றதென்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள். உண்மையில் இவர்களுக்கு தேசத்தில் காரியங்கள் அளவற்று இருக்கின்றன. அவ்வேலைகளை இவர்கள் ஒப்புக்கொள்வதற்கு மனமில்லாமல் வருந்துகிறார்கள். பிச்சை எடுத்துண்பது மேல் என்றும் தேகபலத்தை உபயோகித்து கடினவேலைகள் செய்வது இகழ்ந்தது என்றும் தவறான எண்ணங்கள் கொண்டு உலகத்தில் நடமாடுகிறார்கள். இவ்வித பரிதாப நிலைமையை உணர்ந்து ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வேலைகளை தாங்களே செய்துகொண்டு பிறரை எதிர்பார்க்காமல் இருப்பது உத்தமம். நம்முடைய தேவைகளை குறைத்துக்கொள்ளவாவது வேண்டும்; அல்லது அவைகளை நம் சரீரயத்னத்தினால் அடையவாவது வேண்டும். இக்காலம் கூடும் வரையில், நாம் எவ்வித சுதந்திரமும் பெற வழியில்லை. இக்காலம் நெருங்கியவுடன் கேட்காமலேயே சுயராஜ்யம் நமக்கு கிடைக்கும்.

மீராபாய்.

கங்கை முதல் சிந்து வரையும், இமயம் முதல் விந்தியமலை மட்டும் சஞ்சரிக்கும், எல்லா ஜனங்களும் சர்வ சாதாரணமாக பாடிவரும் பாடல்களிலுள்ள பதங்கள் பாஷை வேறுபாட்டால் நன்கு விளங்காவிடினும் ஒரு பெயர் மட்டும் பலகால் வருவது காதில் படும்.

நடுப்பகலில் இடைப்பையன்கள் இளைப்பாறும் போதும், பக்தகோடிகள் பாசுரங்களை கனிந்து உருகிப் பாடும் போதும், பேர்பெற்ற பாடகர் சபை நடுவே கானம் செய்யும் போதும், நாட்டில் கணிகையரின் பாதச்சிலம்புகள் பம்பும் போதும் அவர்கள் சங்கீத ஒலி நடுவே விம்மி யெழும் ஓசைத்பெயர் ஒன்றுளது. அதுதான் "மீராபாய்" என்ற அவள் முத்திரைப் பெயர்.

இவள் யார்?.

நீ யாரைக் கேட்பினும் கிழவனோ, கிழவியோ, குமரனோ,குமரியோ, யாருக்கும் தெரியும் அவளது திவ்யசரிதம், அவளை மானுட வருக்கத்தில் அவதரித்த தேவதை யெனவே கொண்டாடி ஸ்தோத்தரித்து நேசித்துப் பூசித்து வருகின்றனர்.

பிறந்து பிறந்து திருந்திய நேரிழை போன்றது அவளது ஆத்மா. பக்தியிற் சிறந்த தூய்மை மிகுந்த பெண்மணி; இந்திய கவிஞர் பலருள்ளும் தலைமை வகிக்கும் திறமை வாய்ந்தவள்.

இராஜஸ்தானத்தில் சித்தூர்இராணாவின் அந்தப்புரத்தையே அதி சௌந்தரியம் தாங்கிய மெல்லியர் அலங்கரித்து வந்தனர். அப்படியே அல்லி மலர் போன்ற இப் பெண்ணரசியும் சித்தூர் அரசிளங்குமாரனுக்கே வாழ்க்கைப் பட்டனள். வயது முதிர்ந்து இராணா காலம் சென்றதும், மீராபாய் இராணி யென மகுடம் சூட்டப்பெற்றனள்.

ஸ்திரீ புருஷர் இருவரும் கவிதையிற்தேர்ச்சி பெற்றவராதலால், இருவரும் கவிகள் புனைவதும் பாடல்கள் படிப்பதும் பாடுவதுமாய் பொழுது போக்கினர். ஆனால் வர வர நாளடைவில் அவர்கள் இருவருக்குமுள்ள குணவித்தியாசங்கள் அதிகப்பட்டன. அரசிளங்குமாரன் சிற்றின்ப வருணனையிலே மனமாழ்ந்தனன். அவளது மனமோ உலகப்பற்றின்றி விடுபட்டு பேரின்பத்தை நாடி உயர்ந்தது. ஸ்ரீ கிருஷ்ண பகவானைப்பற்றி வாசிக்க வாசிக்க அவள் பக்தி முதிர்ந்தது. அழகுற வளர்ந்து, பிருந்தாவனத்திடை இடையருடன் விளையாடினவன் முழுக்கடவுளின் அருள் வடிவமே என்று நன்குணர்ந்தாள். அந்த அதிசயப்பிரேமை வடிவத்தில் ஈடுபடாதவருக்கு இகத்திலும் பரலோகத்திலும் சுகமுறும் வழி வேறு இல்லை என்று அறிந்தாள். ஸ்ரீ கிருஷ்ண வடிவம் கொண்டது ஒரு தனிக் கடவுள்தானெனத் தேர்ந்தாள். கோகுல கோபிகளுள் தன்னையுமொருவளாகப் பாவித்தாள். அந்த பாவனையில் தத்துவமுழுமையையும் அநுபவித்து மெய்க்காதலில் ஈடுபட்டு வாழும் வாழ்க்கையாளான அவள் பாடல்கள் பூராவும் பிரேமைக் கடவுளையே குறித்து நின்றன.

காலக்கிரமத்தில் அவளுக்கு 'இராணி' என்று பட்டாபிஷேகம் நடைபெற்றது. இதனால் முன்னிலும் சுயேச்சைப்படி நடக்க முடிந்தது. அவள் கணவனும் அவளிஷ்டப்படி நடக்க இடம் கொடுத்தான். தீவிரமான மதாபிமானமும் அகத்திலுறையிருந்த தெய்வீகப் பிரேமையும் அவளது உற்சாகத்தை மேலிடச் செய்தன. அவளது திடபக்தியானது இவ்வுலக வாழ்க்கையினின்றும் படிப்படியாக அவளை விலகச்செய்தது. வீட்டு வேலைகள் ஆடையாபரணங்கள் இதரலௌகிக விஷயங்கள் எல்லாவற்றையும் மறக்கத்துடங்கினாள். தன் தோழிகளுடன் பரஞ்சோதியைத் தொழுது பாடுவதிலேயே இரவும் பகலும் சென்றன. அவர்களும் அவள் சகவாசத்தால் கோபிகளாகத்

தங்களைபாவித்துக் கொண்டு, பிறர் காணவொண்ணுத் தன்மையனுயினும் அவர்களுக்கு பிரத்தியக்ஷமாய் நின்ற நந்தகோபாலனைக் கண்ணுற்று இவ்வுலக உணர்வை மறந்திருந்தனர்.

அவளுடைய "கிருதி"கள் அதிசிலாக்கியமாயவை. அவைகளை அவள் பாடும்போது அவளுடைய மெல்லிய குரலைக்கேட்டு ஆனந்தித்தவர் மூலமாய் அவற்றின் அரிய குணங்கள் இன்றும் கர்ணபரம்பரையாய் வழங்கி வருகின்றது. சொல்லழகும் குரலழகும் பாடும் விதத்தழகும் இவ்வாறு சேர்ந்திருப்பினும் இவற்றிற்கெல்லாம் மேலாய் அவள் பாடல்களிலிருந்து பொங்கி யெழும் பிரேமைப் பெருக்கும் கருணையின் உருக்கமும் ஹிருதயம் நிறைந்து ததும்பிய மெல்லுணர்வுமே கேட்போர் மனதை யுருக்கி மெய்சிலிர்ப்பச் செய்தன.

இவ்வளவு சிறந்து விளங்கிய பக்திரஸம் எவ்வளவு காலம் தான் சித்தூர்க்கோட்டை அந்தப்புரத்திற்குள் அடைபட்டிருக்கும். எல்லாப்புறமும் வழியும் பிரேமை கொண்டவர் நாற்சுவருக்குள் தங்கி நிற்பாரா? ஊருக்கு வெளியே, அருகாமையில், ஸ்ரீகிருஷ்ணபகவான் உருக்கொண்டு நின்ற பதுமாலயம் ஒன்று இருந்தது. அங்கு சென்று மெய்மறந்து பாடுவாள். பரவசமடைந்து ஆனந்தப்படுவாள்.

இப்படி தினந்தோறும் காதற்கடவுளைக்காணச் சென்று மனமுருகப்பாடி வந்த பாட்டுகளைக் கேட்டவர்எல்லாரும் மனமுருகி, ஈசன் மீது ஆசையும் அவனிடம் அன்பும் கொண்டனர். அநேகர் அவள் கருணை ரசப்பாடல்களை கேட்டுப்போக வெகு தூரத்தினின்றும் வந்தனர். அவளோ அரண்மனையில் பேருக்கு மட்டும் வஸிப்பவள் என்றே யொழிய, பெருமாள் கோவிலையே இருப்பிடமாகக் கொண்டாள். அவள் பக்திப் புகழ் நாடெங்கும் பரவியது.

டில்லி சக்கிரவர்த்தியாய் மொகலாய பெருமானுய் உலகமுழுதும் பேர்பெற்ற அக்பர் காதிலும் இவள் செய்தி எட்டியது. அவரே கற்றறிந்த கவி. பெருந்தன்மை பொருந்தியோரை நன்குணர வல்லவர். பிறர் பெருமையை யுணர்ந்து பாராட்டும் தாராளமனது உடையவர். அவர் கொலுமண்டபம் சாஸ்திரக்ஞராலும் வித்வான்களாலும் நிறைந்திருக்கும்.

அக்பர் சக்கிரவர்த்தியின் மெய் சரிதம் இன்னும் வரையப்படவில்லை.

இவளுடைய அதிசயமான கானரஸத்தை காதால் பருகி இப்படிகடவுளிடம் மெய்க்காதல் கொண்ட பெருமாட்டியையும் காணவேண்டுமென்ற அவா அவருக்கு உண்டாயிற்று.

அந்தக் காலத்தில் சித்தூர் சமஸ்தானம் டில்லி ராஜ்ஜியத்திற்கு கீழ்ப்படியவில்லை. எனினும் மகாராணுவுக்கும் அக்பருக்கும் விரோத பாவம் ஒன்றுமில்லை. ஆயினும், ஹிந்துக்களின் கௌரவத் தன்மையைக் கண்டறிந்த அக்பர் பகிரங்கமாக மீராபாயைக் கண்டு அவள் பாடல்களைக் கேட்க யத்தனித்தால் இன்னுமொரு முறை இராஜஸ்தான நாடுகளுக்கும் தனக்கும் ஒரு பெரிய யுத்தம் உண்டாகும் என்று பயங்கொண்டான். மீராவோ மகாராணி என்றுமட்டும் கௌரவங்கொண்டவள் அல்ல. தூய்மை பூண்ட இந்தியஸ்திரீ யல்லவா அவள்? இராஜபுத்திரரோ, தங்கள் நாடுகளுள் ஒன்றான சித்தூர் சமஸ்தானத்து இராணியை ஒரு துருக்கராஜா கண்ணெடுத்து பார்த்தான் என்றால் பின் வாங்காமல் அந்த பழியைத் தீர்த்துக்கொள்ள யுத்தம் செய்பவர். இது அக்பருக்குத் தெரியும். மிலேச்சர் கண்டபின் வாழ்வதிலும் தீயிற்புகுவதே நலமென்று இராணியும் இதர இராஜஸ்தான ஸ்திரீகளும் எரியுண்டு மாய்வார்கள் என்றும் அவருக்குத்தெரியும்.

இருந்தாலும் அவளைத் தரிசித்து வரவேண்டுமென்று ஆசை பெருகவே இந்து சந்நியாசிகள் போல் தானும் தன் அரண்மனை சங்கீதவித்வான் "டான்சன்" என்பவனும் மாறுவேஷம் பூண்டு மீரா வழக்கமாய் சென்றுபாடிப் புகழும் கோவிலுக்கு புறப்பட்டார்கள்.

அவ்விதம் சென்றவர் அவளைக் கண்டனர். அவள் பாடல்களைக் கேட்டனர். சக்கிரவர்த்தி ஆனந்த பரவசனாய் அவள்கால் புறத்துவிழுந்து "தாயே! எனக்கும் நீ முக்தி நெறி காட்டுவாய்" என்று கெஞ்சிக் கதறினான். அவள் கண்ணொளி புஷ்பரேணுவினும் மிருதுவாய் அவன்மீது விழுந்தது. எழுந்திருந்து தன் கந்தைக்கு உள்ளே அணிந்திருந்த நவரத்தின மாலையை எடுத்து "அம்மணி, உங்களுடைய கோயில் பெருமாளின் பாத மலருக்கு இதை சமர்ப்பியுங்கள்" என்றான்.

ஹாரத்தைக்கையில் வாங்கின மீராபாய் "ஸ்வாமி! இது விலை உயர்ந்தது போல் காணப்படுகிறதே! தங்கள் போன்ற பரதேசிகளுக்கு இவை எவ்வாறு கிடைப்பனவோ?" என்று அந்த மாறுவேஷம் பூண்ட சக்கிரவர்த்தியைக்கேட்க, அவர் "நான் யமுனையில் தீர்த்தமாடும்போது ஒரு நாள் இதை கண்டெடுத்தேன். உங்களுக்கும் நீங்கள் வழிபடு தெய்வத்திற்குமே இது தகுமென்று தோன்றியதால் உங்களிடம் கொடுத்தேன்" என்று பதிலளித்தான். மீராவும் அவர்கள் இருவருடைய தெய்வபக்தியை மெச்சி அதை அங்கீகரித்தாள். அவர்களும் விடைபெற்று டில்லிக்குத்திரும்பச்சென்றனர்.

"நகைகள் கேடு விளைப்பன" என்னும் பழமொழிக்கிணங்க இந்த ரத்தினமாலையும் அவளுடைய பிரேமை மலருக்கு பகையாயிற்று. அவளுடைய சுகவாழ்க்கையில் துக்கத்தைக்கொணர்ந்தது. அவளுடைய இல்லற சுகத்தை நாசம் செய்தது. அவள்மீது அவளுடைய கணவனுக்கிருந்த காதலை கசப்பித்தது.

பரந்தாமனின் நீலகோல வடிவத்தில் இவள் ஆசையுடன் அந்த மாலையை இடவே, ஒளிவீசித் திகழும் அந்த ஆபரணத்தை அவ்வாலயம் வருவார் அநேகரும் கண்ணுற்று அதைப்பற்றிப் பேசுவாராயினர். அவர்களுள் ஒருவர் "லக்ஷக்கணக்கான ரூபாய்கள் கொடுத்து டில்லி சக்கிரவர்த்தியான அக்பர் விலைக்குவாங்கின மாலை யல்லவா இது" என்றார். அதனால் அங்கு வந்து இந்த மாலையைக் கொடுத்துப்போன பரதேசிகள் யார் என்று புலப்பட்டது. அரசர் காலடிகளை மறைத்தல் முடியுமோ? மொகலாய பெருமான் வந்து "தன் மனைவியை கண்ணெடுத்துப் பார்த்தான், அவள் மெய்தீண்டி பரிசும் அளித்தனன் என்ற வம்புப்பேச்சு அரசன் காதில் விழவே அவன் ஆ! மானபங்கம் ஏற்பட்டதே! மார்வார் ராஜகுலத்திற்கே அபக்கியாதி அல்லவா பிறந்தது; என் மனைவி ஒரு மிலேச்சன் தீண்டின பதிதையானுளே" என்று மிகவும் நொந்து பதிதையாகையால் இவள் சாதல்தான் தகும் என்று ஆக்ஞையிட்டான். ஆனால் அரசனுக்ஞையானாலும் ஒருவரும் அதை மேற்கொள்ளுவாரில்லை சமஸ்தான சேவகர் ஒவ்வொருவராய் நான் மாட்டேன் நான் மாட்டேன் என்று மறுதளித்தனர். ஆகவே மகாராணு "உன்னை நீயே மாய்த்துக்கொள்" என்று காகிதம் எழுதி, அவள் வழக்கப்படி கோவிலிலிருந்து பூஜை செய்து அரண்மனைக்குத் திரும்ப வரும்போது அவளிடம் கொடுக்கச்சொல்லிக் கொடுத்தார்.

கணவனிட்ட கட்டளையை மீறுபவளோ மீராபாய்? தன்னைச் சூழ்நின்ற பக்தர்களுக்கு இது தெரிந்தால் அவர்கள் பரிதபிப்பார், அரசன் மீது கோபங்கொள்வார், என்று ஒன்றும் சொல்லாமலே திரும்ப அரண்மனைக்குப் போனாள். அங்கே போய் தன் ஆடை ஆபரணங்கள் எல்லாவற்றையும் ஒழித்து மஞ்சள் துணி ஒன்றை மட்டும் சுற்றிக்கொண்டு வெளிப்போந்தாள். இரவு நிச்சப்தமாயிருந்தது. அவள் வெளிப்போனது யாருக்கும் தெரியாது. ஆகாயத்தில் மட்டும் பொன்னுடை புனைந்தாடும் கணிகையர் கண்கள் போல் நக்ஷத்திரங்கள் மினுமினுத்தன.

ஆற்றங்கரையை அடைந்து சற்று தியானத்திலாழ்ந்து நின்றபின் சடேலென்று பிரவாகத்தில் விழுந்தாள். விழும்போது விழுமியதோர் பரஞ்சோதி அவள் கண்கள் முன் தோன்றியது. மெய்மறந்தாள். அந்தக்காட்சியில் பேரின்பத்தில் அவள் மெய் மறந்தாள். அவள் கண்டது வெறும் தோற்றமல்ல. அந்த சோதி வடிவு கொண்ட தெய்வம் குனிந்து கருணை பொழிந்து "மீரா! உன்கணவன் சொற்படி நீ நடந்தாய் விட்டது. மீளவும் உனக்கு உயிர் தந்தேன் இனி இதினும் உயர்ந்த காரியங்கள் நீ செய்ய வேண்டியிருக்கிறது. அந்தக் கடமைகளையும் நீ கைப்பிடித்தல் வேண்டும்! எழு! மறுபடியும் உயிர் தரித்து உலகத்திற்கு உய்யும் வழி காட்டு" என்று மறைந்தது.

மீராகண் விழித்தபோது நடுப்பகலாயிற்று. ஆற்றோரத்தில் ஒதுக்கப்பட்டுக்கிடந்த அவள் எழுந்து கடவுளைப் பாடிக்கொண்டு நடந்தாள். எதிரில் கண்ட சில இடையர்களைப்பார்த்து "மக்காள்! கண்ணன் திருவிளையாடல் செய்தருளிய நாட்டிற்கு எதுவழி?" என்று கேட்டாள். அவர்களும், அவளுக்குக் கொஞ்சம்பால் கொடுத்து அவள் சிரமத்தை ஆற்றியபின் "கூடவாருங்கள், அம்மா! நாங்கள் அங்குதான் போகின்றோம்" என்று அவளைக்கூட்டிக்கொண்டு சென்றனர்.

போகும் வழியெல்லாம் ஹரிநாம ஸங்கீர்த்தனம்; அவள் வழிச்சென்ற ஊர்கள் எல்லாம் அவளுடைய தெய்வீகசங்கீதம் பரவி சாந்தம் அடைந்தன. அவள் வழிச்செல்லும்போது, ஆண் பெண் எல்லோரும் தாங்கள் வேலையை விட்டு அவளைக் கண்டு திகைத்து நின்றனர். குழந்தைகள் தங்கள் விளையாட்டையும் மறந்து "ஹரி ஹரி" என்று பாடிக்கொண்டு அவளை பின்தொடர்ந்தார்கள். வழியில் சிலர் அவளுக்குப்பொருள்கொண்டு வந்து கொடுத்தார்கள். ஆனால் அவைகளை அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. சிலர் திண்பண்டங்கள் கொடுத்தனர். பலவிதமான இடையூறுகள் உண்டானபோதும் அவள் அடிச்சுவட்டை பின்பற்றினவராய் சிலர் பின்னடந்தனர். இப்படி, சகல பரிவாரங்களுடன் சாக்ஷாத் உமாதேவியே கைலயங்கிரியினின்றும் வந்தனளோ என்னும்படி பிருந்தாவனத்தை யடைந்தனள்.

கர்ணபரம்பரையாய் பரவிய அவளுடைய அரும்பாடல்கள்போல் அவள் பிருந்தாவனத்திற்கு வந்த செய்தியும் நாடெங்கும் பரவியது. அதுகேட்டு சிற்றூரில் அவளைப்பின்பற்றியிருந்தவா்கள் அவளிருக்குமிடம் தெரிந்தவுடன் அவளைக் காண விரைந்து வந்தனர். அவளை முன்பின் அறியாதவரும் புதியதோர் ஆவலுடனே அங்கு வந்து மொய்த்தனர். இனி அவள் [illegible]மை தங்கிய மீவார் மகாராணி அல்ல. இடுப்பில் ஒரு பழந்துணியும் கையில் பிச்சை ஓடும் தாங்கிய பரதேசியான அவள் மீவாரினும் அகன்றதோர் புகழ் நாட்டிற்கு அதிபதியானாள். மனிதருக்கு பரம சாந்தியும் மோக்ஷமும் அளிக்கும் பிரேமைப்பிரதேசம் மீவார் போன்ற குறுகிய நாடாகுமோ?

"ரூப கோசாயி" என்று பிருந்தாவனத்தில் ஒரு தபசி இருந்தார். அவர் எல்லாம் படித்துணர்ந்தவர் என்றாலும் மோக்ஷம் வேண்டுமெனில், பணத்தையும் பெண் முகத்தையும் கண்ணெடுத்து பார்க்கக் கூடாதென்ற வைராக்கியம் கொண்டவர். இதைக்கேட்ட மீராபாய் பிருந்தாவனத்தில் ஆண்தகை ஒருவனே. கண்ணனைத்தவிர இங்கு வேறு புருஷர் உண்டோ? மற்ற ஜீவராசிகள் எல்லாம் அவனிடம் காதல் வைத்த கோபிகள் அன்றோ! ரூப கோசாயிக்கு இந்த இரகசியம் தெரியாதோ. கண்ணபிரானின் அந்தப்புரமாகிய இவவூரில் ரூபகோசாயி புருஷராயின் இருப்பது சரியல்ல என்று அவருக்கு ஒரு ஓலைவிடுத்தாள். இதை வாசித்த ரூப கோசாயி பரமபிரீதி அடைந்தவராய் "இவள் சாதாரண ஸ்திரீயல்ல. இவளை காணுதல் தகும்" என்று தன் கோயிலுக்கு வரவழைத்து அவள் தன் அடிவணங்கியதும் ஆசீர்வதித்து "குழந்தாய்! உனக்கு என்னவேண்டும்" என்றார். "ஸ்வாமி, தங்கள் வாய் நின்றும் கடவுள் மொழியும் வார்த்தைகள் கேட்டிருக்க உத்திரவு கொடுக்கவேண்டும்" என்றாள்.

நாளடைவில், கடவுள்மீது அவள் கனிந்து உருகிப்பாடிய பாடல்களாலும் அவள் பிரேமாநுபவங்களாலும் நிறைந்த பிருந்தாவனம் தேவலோகம் போல் அமைதியுற்று விளங்கிற்று. அவளுடன் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்ய ஆயிரக் கணக்கான ஜனங்கள் அங்கு வருவதாயிற்று. பிருந்தாவனத்தில் அவள் பாடிய பாடல்கள் இமயமலைச்சார்புகளிலும் கங்கைக்கரையிலும் யமுனாதீரத்திலும் பஞ்சநதத்திலும் சிந்து பிரதேசத்திலும் அதற்கப்பாலிருக்கும் மகாராஷ்டிரத்திலும் கடற்கரை நாடுகளிலும் கூட பரவி விளங்கின.

சிற்றூரில் மட்டும் பரவாமலிருக்குமா? அங்கும் ஒவ்வொரு சந்திலும் வீடுதோறும் தெருவு தோறும் "மீரா" என்றமுத்திரையிட்ட அவள் பாடல்கள் பாடப்பட்டன. எங்கு பார்த்தாலும் அவள் பேர் வழங்கு வதைக்கண்ட இராணாவுக்கு உண்மை உதித்தது. "தக்கவள் அல்லள் என்று தள்ளினேமே! மீவார் இராணியினும் உயர்ந்த பதவிக்குத் தகுந்தவளான கண்மணியை" என்று பரிதபித்தான்.

மிலேச்சன் மெய்தீண்டினான் என்ற அபவாதம் நீங்கும்படி நான் கொலை செய்து கொள்ள ஆக்ஞாபித்ததையும் மறந்து மீவார் குலத்திற்கே பெற அரிய புகழ் தந்தாள். இவள் அன்பு உலகம்முழுதும் பரவிநிற்பது அல்லவா. என்று பரதேசிவேஷம் பூண்டு அவளைப்பார்த்து வரவேண்டும் என்ற ஆசை கொண்டு பிருந்தாவனத்திற்குப் புறப்பட்டான்.

மீரா கோயில் வாசலில் உட்கார்ந்திருந்தாள். வாடிய தாமரையின் இதழ்கள்போல் சுருங்கியிருந்தன அவளுடைய கபோலங்கள். ஆனால் அவள் புன்சிரிப்பு மட்டும் மாறவில்லை.

"கடாக்ஷிக்கவேண்டும்" என்றான் மீவார் அரசன். "நான் ஒரு பிச்சைக்காரி. பணக்காரரைப்பார்த்துக்கேளுங்கள்" என்றாள் மீரா.

"உண்மையில் பிச்சைக்காரனுக்கு பிச்சைக்காரர்தான் துணை." 'என்னவேண்டும்?" "நான் இழைத்த பிழையை பொருத்தருளவேண்டும்" என்று அவள் அடிவணங்கிய அரசனைத்தூக்கி இருத்தி அவன் காலில் விழுந்து நமஸ்கரித்து "நாதா, இப்பொழுதாவது மனைவியின் ஞாபகம் வந்ததா?"

என்றாள். பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?

திரும்ப மீவாருக்குப்போய் அங்கே ராணியாய் இருந்தாள். ஆண்டுதோறும் ஆறுமாதம் பிருந்தாவனத்திற்குச்சென்று இருக்கவேண்டும் என்று கணவனிடம் வேண்டிக் கொண்டபடி அங்கு வருஷம் தோறும் ஆறுமாதம் இருப்பதானாள்.

மீராபாய் பாடி உபதேசித்த வழி கடுமையான வைராக்கிய மார்க்கமல்ல. கிருஷ்ணன் மதம் அவ்விதம் கடுமையானதன்று. நமக்கு உண்டான வாழ்க்கையிலேயே பக்தி நிறைந்து நித்திய கருமங்களை விடாது செய்து வழிபட்டு வாழவேண்டும் என்பதே.

அவளுடைய அரும்பாடல்கள் மொழிபெயர்க்க கூடியவை அல்ல என்றாலும் ஒன்றிரண்டு உதாரணம் காட்டாமல் முடியாது. மொழிபெயர்ப்பில் மதுரமான அவளுடைய கான ரசம் விளங்காவிடினும் அவள் உபதேசமொழிகள் தெளிவாய் விளங்குமல்லவா.

முத்தி பெறும் வழி என்ன வழி என வினவில்
ஓயாமல் தீர்த்தாடினால்தான் என்றால்
மீனுக்கு மது கிடைக்கவேண்டுமே.
மாம்சம்தனை விலக்கிக்காய் கனிகள் தின்பதெனில்
குரங்கும் சிறு புள்ளும் அப்பதவி அடைந்தனவோ?

புல் தின்று வாழும் வாழ்வே வழி என்றால்
மாடுகளும் ஆடுகளும் அவ்வழி நின்றனவே.
ஆதலால் இவையல்ல
வேறு உளது வழி என்றாள் மீரா.
அது கேள்.
கடவுள்பால் காதல் கொள்ளும் ஒரு வழியே.

ஆந்தர ஆயுர்வேத வைத்திய சாலை
லிமிடெட்.
19, ஆரிஸ் ரோட்டு, சென்னை.
டாக்டர். A. லக்ஷ்மிபதி
Founder and Managing Director.
சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி
தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.
கியாட்டலாக்குக்கு எழுதுங்கள்.

காஞ்சீபுரம் கருடசேர்வை
விளம்பரங்கள்.
நாளது வைகாசி ௴ உற்சவத்தில் ஏராளமான ஜனங்கள் வெளியூர்களிலிருந்து சேருவார்கள். ஷை காலத்தில் துண்டுபிரசுரங்கள், நோட்டீசுகள், படமுள்ள விளம்பரங்கள் முதலியன வீடுவீடாகவும் முக்கிய இடங்களிலும், வினியோகப்படுத்தி வியாபாரவிருத்தி செய்வதற்கு தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். விவரங்களுக்கு போதுமான தபால் முத்திரைகளுடன் எழுதவும்.
MADRAS ADVERTISINGS
(சென்னை விளம்பரங்கள்).
10, VENKAIER STREET, MADRAS.

வேண்டும்
அளவு 27" × 17" மேற்படாத
பிரகடனங்கள்
ஜட்காவண்டி
மேற்கூரையில் ஒட்டுவதற்கு
நூற்றுக்கு
தினத்திற்கு ரூ. 5-0-0
வாரத்திற்கு ரூ. 21-0-0

தமிழ் உலகு
புதன் கிழமைதோறும் வெளிவரும்
புதிய தமிழ் பத்திரிகை.
16, பசுபதி அக்கிரஹாரம், மைலாப்பூர்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில்
டி. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' கார்யாலயத்தில் ஆர். பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.